சார்பு நீதிமன்றம், சங்ககிரி
முன்னிலை :- திரு. N. பன்னீர்செல்வம், B.A., B.L.,
சார்பு நீதிபதி, சங்ககிரி
2026-ம் வருடம் ஜுலை மாதம் 21-ம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆடி மாதம் 05-ம் நாள்)
<u>அசல் வழக்கு எண்.192/2026</u>
<u>CNR No.TNSA070003342026</u>

கனரா வங்கி, கோனேரிப்பட்டி கிளைக்காக அதன் கிளை மேலாளர்
மற்றும் பொது அதிகார முகவர் K. ரவிசங்கர் .. வாதி

// இடையே //

சேவிகவுண்டர் .. பிரதிவாதி

இவ்வழக்கானது கடந்த 13.07.2026-ம் தேதியன்று என் முன்னால் விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் செ.செந்தில்குமார், கே.ஜி. ஹரிணி, ஆர். திவ்யகலா ஆகியோர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு வழக்கில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை அவர் பெற்றுக்கொண்டும், வாய்தா தேதியில் அழைத்தும் ஆஜராகாததால், பிரதிவாதியை தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களையும், விசாரிக்கப்பட்ட சாட்சியின் சாட்சியத்தையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

// தீர்ப்புரை //

இவ்வழக்கானது, வாதி வங்கிக்கு பிரதிவாதி தாவா தொகையான ரூ.1,94,935/–மும் அதற்கு பின்வட்டி ஆண்டொன்றுக்கு 10.40% வீதம், மாதாந்திர கூட்டு வட்டியுடன் தாவா தாக்கலான நாளில் இருந்து தொகை பைசலாகும் நாள் வரை கணக்கிட்டு தாவா செலவுத் தொகையுடன் செலுத்தவேண்டுமென்று உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:–</u>

பிரதிவாதி கடந்த 11.09.2018–ம் தேதியன்று வாதி வங்கியில் ரூ.1,00,000/– பயிர் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தார். மேற்படி கடன் மனுவை பரிசீலனை செய்த வாதி வங்கி அதிகாரிகள் 11.09.2018–ம் தேதியன்று ரூ.1,00,000/– கடன் வழங்க அனுமதி

அளித்தனர். பின்னிட்டு மேற்படி கடனுக்காக கடன் ஒப்பந்தம், பயிர் உற்பத்தி கடனுக்கான விண்ணப்ப படிவம், அடமான ஒப்பந்தம் மற்றும் பத்திரம், மேற்படி கடன் தொகைக்கான பிணையம் ஆகியவற்றை 15.08.2021 மற்றும் 13.08.2024 ஆகிய தேதிகளில் வாதி வங்கியில் ஒப்படைத்தார். மேற்படி தொகையை 60 மாத சம தவணைகளில் ரூ.4470/- வீதம் செலுத்தவும் ஒப்புக் கொண்டார். பின்னிட்டு பிரதிவாதி ஒப்புக் கொண்டபடி கடன் தொகையை செலுத்தத் தவறியதால் வாதி வங்கி கடந்த 03.06.2025-ம் தேதியன்று மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்த கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி கடந்த 10.06.2025-ம் தேதியன்று பெற்றுக் கொண்டு எந்த பதில் அறிவிப்போ அல்லது கடனை திருப்ப செலுத்தவோ முன்வரவில்லை. வாதி வங்கி பராமரித்து வரும் கணக்குகளின் படி பிரதிவாதி வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ரூ.1,94,935/- ஆகும். அதனால், பிரதிவாதி, வாதி வங்கியிடம் பெற்ற கடன் தொகையை வட்டியுடன் வசூல் செய்ய வேண்டி வாதி வங்கியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பிறகு பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பி, அதனை பிரதிவாதி பெற்றுக்கொண்டும் வாய்தா தேதியில் அவரை நீதிமன்றத்தில் அழைத்தபோது அவர் ஆஜராகாததால் அவர் இவ்வழக்கினைப் பொறுத்தவரையில் தோன்றாத்தரப்பினராக கருதி ஒருதரப்பாக்கப்பட்டார்.

3. <u>பிரச்சனை:</u>

இவ்வழக்கில் வாதி கோரியபடி பரிகாரம் பெற உரியவரா? இல்லையா? என்பது தான் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

4. <u>தீர்வு</u>:

இத்தாவாவில் வாதி வங்கி தரப்பில், வாதி வங்கியின் கிளைமேலாளர் ரவிசங்கர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இத்தாவாவில் வாதி வங்கி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை மெய்பிக்கும் பொருட்டு வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட வாதி வங்கியின் கிளை மேலாளர் ரவிசங்கர் என்பவர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரை சங்கதிகளை ஒட்டி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் கடன் விண்ணப்பம் வா.சா.ஆ.1 ஆகவும், கடன் அனுமதி கடிதம் வா.சா.ஆ.2 ஆகவும், ஒப்பந்தம் மற்றும் அடமானப்பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், 15.08.2021–ம் தேதியிட்ட கடன் மற்றும் பிணைய ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.4 ஆகவும், 13.08.2024–ம் தேதியிட்ட கடன் மற்றும் பிணைய ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.5 ஆகவும், வாதி வங்கி, பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.6 ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.7 ஆகவும், அடையாளச்சான்று வா.சா.ஆ.8 ஆகவும், கணக்கு பட்டியல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வாதி தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை மறுத்துரைக்கும் விதமாக குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதி முன்வராமல் தோன்றாத்தரப்பினராக இருந்து வருகிறார். அதனால் வாதி வங்கியிடமிருந்து, பிரதிவாதி வாதி வங்கியிடம் கடன் பெற்றுவிட்டு அதனை உரிய வட்டியுடன் திருப்பி செலுத்தாமல் இருந்து வருவது உண்மை தான் என தெரியவருகிறது. மேற்படி சாட்சியின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் வாதி தன்மீதுள்ள மெய்பிக்கும் சுமையை தீர்த்துள்ளதால், வாதி தாவாவில் கோரியபடி பரிகாரம் பெற உரியவர் என இந்நீதிமன்றம் இவ்வழக்கின் பிரச்சனைக்கு தீர்வு காண்கின்றது.

6. <u>முடிவு:</u>

இறுதியாக, இத்தாவா அனுமதிக்கப்பட்டு வாதி வங்கிக்கு, பிரதிவாதி தாவா தொகையான ரூ.1,94,935/–மும் அதற்கு பின்வட்டி தாவா தாக்கலான தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9% மும், பின்னிட்டு தீர்ப்பாணை தேதியிலிருந்து முழுதொகையையும் செலுத்தி முடிக்கப்படும் தேதி வரையில் 6% மும் சேர்த்து செலவு தொகையுடன் செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகையை வாதி வங்கிக்கு, பிரதிவாதி செலுத்த இரண்டு மாதங்கள் கால அவகாசம் அளித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026–ம் ஆண்டு ஜூலை மாதம் 21–ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANNEERSELVAM N
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.07.21 17:29:08 +0530

சார்பு நீதிபதி,
சங்ககிரி.

<u>1. வாதி தரப்பு சாட்சி:–</u>

வா.சா.1 – ரவிசங்கர்(வாதி)

<u>2. வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 11.09.2018 | கடன் விண்ணப்பம் | /அசல்/ |
| வா.சா.ஆ.2 | 11.09.2018 | வாதி வங்கி வழங்கிய கடன் அனுமதி கடிதம் | /அசல்/ |
| வா.சா.ஆ.3 | 11.09.2018 | ஒப்பந்தம் மற்றும் அடமானப் பத்திரம் | / அசல் / |
| வா.சா.ஆ.4 | 15.08.2021 | கடன் மற்றும் பிணைய ஒப்பந்த பத்திரம் | / அசல் / |
| வா.சா.ஆ.5 | 13.08.2024 | கடன் மற்றும் பிணைய ஒப்பந்த பத்திரம் | / அசல்/ |
| வா.சா.ஆ.6 | 03.06.2025 | வாதி வங்கி , பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | /அலுவலக நகல் / |
| வா.சா.ஆ.7 | 10.06.2025 | பிரதிவாதி கையொப்பம் செய்த அஞ்சலக ஒப்புதல் அட்டை | / அசல்/ |
| வா.சா.ஆ.8 | –– | பிரதிவாதியின் ஆதார் அட்டை | / நகல் / |
| வா.சா.ஆ.9 | 31.05.2025 | கணக்கு பட்டியல் | /இணைய தள நகல்/ |

3. <u>பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u> இல்லை.

PANNEERSELVAM N
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.07.21 17:29:16 +0530

சார்பு நீதிபதி
சங்ககிரி

சார்பு நீதிமன்றம், சங்ககிரி
அ.வ.எண்.192/2026
வரைவு / சீரான தீர்ப்புரை
நாள். 21.07.2026